இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி. கே. சேகர்பாபு நேற்று (13.02.2025) சென்னை, திருவான்மியூர், பாம்பன் குமரகுருதாசர் சுவாமி திருக்கோயிலில் விரிவுப்படுத்தப்பட்ட அன்னதானத் திட்டத்தை தொடங்கி வைத்தார். உடன் சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், கூடுதல் ஆணையர் டாக்டர் சி.பழனி, இணை ஆணையர் திருமதி கி.ரேணுகாதேவி, மாநகராட்சி உறுப்பினர் திருமதி கயல்விழி மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

திருவான்மியூர், பாம்பன் குமரகுருதாசர் சுவாமி

திருக்கோயிலில் விரிவுபடுத்தப்பட்ட அன்னதானத் திட்டம்!

அமைச்சர் பி. கே. சேகர்பாபு தொடங்கி வைத்தார்!

சென்னை,பிப்.14- தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி. கே. சேகர்பாபு இன்று (13.02.2025) சென்னை, திருவான்மியூர், பாம்பன் குமரகுருதாசர் சுவாமி திருக்கோயிலில் விரிவுப்படுத்தப்பட்ட அன்னதானத் திட்டத்தை தொடங்கி வைத்தார்.

பின்னர், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

இந்த சமய அறநிலையத்துறை திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொண்டு குடமுழுக்கு நடத்துதல், பக்தர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்குதல், திருக்கோயில் சொத்துகளை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டெடுத்து பாதுகாத்தல் போன்ற பல்வேறு பணிகளை மேற்கொண்டாலும், இறை பசியோடு வருகின்ற பக்தர்களுக்கு வயிற்றுப் பசியை போக்குகின்ற வகையில் அன்னதானத் திட்டத்தையும் செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்பு, 2 திருக்கோயில்களில் செயல்படுத்தப்பட்டு வந்த நாள் முழுவதும் அன்னதானத் திட்டம் 13 திருக்கோயில்களிலும், ஒருவேளை அன்னதானத் திட்டம் 23 திருக்கோயில்களுக்கு விரிவுப்படுத்தப்பட்டு 764 திருக்கோயில்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன்மூலம் ஆண்டிற்கு மூன்றரை கோடி பக்தர்கள் பயன்பெறுவதோடு, இத்திட்டத்திற்காக ரூ.120 கோடி செலவிடப்படுகிறது.

2024 - 2025 ஆம் ஆண்டிற்கான சட்டமன்ற அறிவிப்பில், திருவான்மியூர், பாம்பன் குமரகுருதாசர் திருக்கோயில், திருநாகேசுவரம், நாகநாத சுவாமி திருக்கோயில், திருக்கருக்காவூர், முல்லைவனநாத சுவாமி திருக்கோயில், வியாசர்பாடி, இரவீசுவரர் திருக்கோயில், கந்தகோட்டம், முத்துக்குமார சுவாமி திருக்கோயில், கொளத்தூர், சோமநாத சுவாமி திருக்கோயில், சோமாசிபாடி, பால சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருவண்ணாலை கிரிவலப் பாதையில் அமைந்துள்ள குபேரலிங்கம் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களில் அன்னதானத் திட்டம் விரிவுப்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டதை செயல்படுத்திடும் வகையில் இன்றைய தினம் 8 திருக்கோயில்களில் அன்னதானத் திட்டம் விரிவுப்படுத்தப்பட்டுள்ளது.

திருவான்மியூர், பாம்பன் குமரகுருதாசர் சுவாமி திருக்கோயிலில் திங்கள், புதன், சனி மற்றும் ஞாயிறு தினங்களில் நாளொன்றுக்கு 500 பக்தர்களுக்கும், செவ்வாய், வியாழன், வெள்ளி, பௌர்ணமி, கிருத்திகை மற்றும் சஷ்டி தினங்களில் நாளொன்றுக்கு 800 பக்தர்களுக்கும், மயூர வாகன சேவை, சிவராத்திரி, மகாசிவராத்திரி, குருபூஜை, கந்தசஷ்டி தினங்களில் 1,000 பக்தர்களுக்கும் அன்னதானம் வழங்கப்படுகிறது.

திருநெல்வேலி, நெல்லையப்பர் திருக்கோயிலில் திருவிழா நாட்களான 61 நாட்களுக்கு தினந்தோறும் 500 நபர்களுக்கும், திருச்சி மாவட்டம், திருப்பட்டூர், பிரம்மபுரீஸ்வரர் திருக்கோயிலில் வியாழக்கிழமைதோறும் 500 நபர்களுக்கும் அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது. இதுபோன்று தமிழ்நாடு முழுவதும் இறையன்பர்கள் அதிகமாக வருகின்ற திருக்கோயில்களில் பக்தர்களின் தேவைகளை அறிந்து அன்னதானம் அளித்து பக்தர்களின் இறைப் பசியையும் வயிற்றுப் பசியையும் போக்குகின்ற அரசாக திராவிட மாடல் அரசு திகழ்கிறது.

கேள்வி : அண்ணாமலை கண்டு திமுக வுக்கு பயம் வந்துவிட்டது என்று திருமதி தமிழிசை சௌந்தரராஜன் தெரிவித்துள்ளாரே?

பதில் : பயமறியாத இயக்கம் திராவிட முன்னேற்ற கழகம். எங்களை பொறுத்தவரையில் பயம் என்பது சுவற்றில் ஒட்டிய சுண்ணாம்பு போன்றது தட்டினால் பொட்டென்று விழுந்து விடும். இந்த இயக்கம் அனைத்து கரடு முரடான மேடு பள்ளங்களையும், கடுமையான பாதைகளிலும் பயணித்து வந்த இயக்கம். ஆகவே இது போன்றவர்களுக்கு பயப்படுவதற்கு எங்களிடம் ஒன்றும் இல்லை. மடியிலே கனமில்லை. எங்களுக்கு வழியில் பயம் இல்லை. ஒரு அண்ணாமலை அல்ல, ஓராயிரம் அண்ணாமலை வந்தாலும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் அடிமட்ட தொண்டனே அவர்களை சமாளிக்கின்ற ஆற்றல் இந்த இயக்கத்திற்கும், தொண்டர்களும் இருப்பதால் இவர்களை பார்த்து பயப்பட வேண்டிய அவசியம் எங்களுக்கு கிடையாது.

இந்நிகழ்ச்சியில் சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், கூடுதல் ஆணையர் டாக்டர் சி. பழனி, இணை ஆணையர் திருமதி கி.ரேணுகாதேவி, உதவி ஆணையர் கி.பாரதிராஜா, மாநகராட்சி உறுப்பினர் திருமதி கயல்விழி, செயல் அலுவலர் பெ.சக்தி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மார்ச் 1 எளியோர் எழுச்சி நாள் விழா!

சென்னை தென்மேற்கு மாவட்ட இளைஞர் அணி ஆலோசனைக் கூட்டம்!

மாவட்ட அமைப்பாளர் ராஜா – அன்பழகன் எம்.சி. அறிக்கை!

சென்னை, பிப். 14

சென்னை தென்மேற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ராஜா அன்பழகன் எம்.சி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை தென்மேற்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், பகுதி துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் மாவட்டக் கழகச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. அறிவுறுத்தல்படி, பகுதிக் கழகச் செயலாளர்கள் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ, கே.ஏழுமலை எம்.சி, நந்தனம் மதி எம்.சி, எஸ். முரளி ஆகியோரின் ஆலோசனைக்கிணங்க, எனது (ராஜா அன்பழகன் எம்.சி) தலைமையில் நாளை (15.02.2025 சனிக் கிழமை) மாலை 6 மணிக்கு, தி.நகர் பேருந்து நிலையம் அருகில் உள்ள சென்னை தென்மேற்கு மாவட்ட இளைஞர் அணி அலுவலகத்தில் நடைபெறுகிறது.

எனவே சென்னை தென்மேற்கு மாவட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டும் என கேட்டு கொள்கிறேன்.

பொருள்:

கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாள் விழா மற்றும் கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு சென்னை தென்மேற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ராஜா அன்பழகன் எம்.சி. தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

ரூ.21 லட்சம் மதிப்பீட்டில்

பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் இ-சேவை மையம்!

அமைச்சர் சா.சி.சிவசங்கர் – ஆ.இராசா.எம்.பி. திறந்து வைத்து, இணைய வழிச் சான்றுகளை பயனாளிக்கு வழங்கினர்!

பெரம்பலூர், பிப். 14- பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் அருகில், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.21 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அரசு இ - சேவை மைய கட்டிடத்தை போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி சிவசங்கர், மேனாள் ஒன்றிய அமைச்சர் ஆ.இராசா.எம்.பி., ஆகியோர் ரிப்பன் வெட்டி, திறந்து வைத்தனர். முன்னதாக அங்கு வைக்கப்பட்டிருந்த முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்களின் உருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது.

பின்னர் அரசு இ - - சேவை மைய செயல்பாட்டினை போக்குவரத்துத் துறை அமைச்சர், மேனாள் ஒன்றிய அமைச்சர் இருவரும் பார்வையிட்டு, இணைய வழி சான்றினை பயனாளிக்கு வழங்கினார்கள்.

அரசின் சேவைகள் எளிதாகவும், விரைவாகவும் கிடைத்திடும் வகையில் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறையின் தமிழ்நாடு மின் ஆளுமை முகமை மூலமாக அரசு இ - சேவை மையங்களை நடத்திவருகிறது. இச்சேவையினை பொதுமக்களுக்கு எளிதில் கிடைத்திடும் வகையில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 234 - சட்டப்பேரவை உறுப்பினர்களின் அலுவலகங்களிலும் இ-சேவைமையங்கள் அமைத்திடவும், அம்மையங்களுக்கான நவீன மேசைகணினிகள் வழங்கி தொடங்கி வைத்துள்ளார்கள்.அதன் அடிப்படையில் பெரம்பலூர் சட்டமன்ற அலுவலகம் அருகில் பெரம்பலூர்சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.21 லட்சம் மதிப்பீட்டில்புதிதாக கட்டப்பட்டுள்ள அரசு இ சேவை மைய கட்டிடத்தை போக்குவரத்து துறை அமைச்சர் அவர்களும்,நீலகிரி பாராளுமன்ற உறுப்பினர் அவர்களும்,இன்று திறந்து வைத்து அரசு இ - சேவை மையத்தின் மூலமாகஇலவசமாக இணைய வழி சான்றினை பயனாளிக்கு வழங்கினார்கள். இந்த இ-சேவைமையத்தில் சிறு, குறு விவசாயி சான்றிதழ், ஒய்வூதியத்திட்டம், விதவைச் சான்று, சாதிச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், வருமானச்சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ் வருவாய்த்துறையின் சான்றிதழ்கள், சமூக நலத்துறையின் திருமண நிதியுதவி திட்டம், இணைய வழி பட்டா மாறுதல், முதல் தலைமுறை பட்டதாரிக்கான சான்றிதழ்கள், கலப்புத்திருமண சான்றிதழ்கள், சொத்து மதிப்பு சான்றிதழ்கள், இரண்டுபெண் குழந்தைகளுக்கான சான்றிதழ்கள் உள்பட அனைத்து திட்டங்களுக்கும் இணையவழி சான்றுகளை இலவசமாக பெறலாம் என்பது குறிப்பிடத்தக்கது.

இதில் மாவட்ட ஆட்சியர் கிரேஸ் பச்சாவ், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன், மாநில ஆதிதிராவிடர் நலக் குழு துணைச் செயலாளர் பா.துரைசாமி, மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா. ப.பரமேஷ்குமார், தலைமை செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், மாவட்ட துணைச் செயலாளர் தழுதாழை பாஸ்கர், நகராட்சி தலைவர் அம்பிகா ராஜேந்திரன், பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர் கவிதா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எம்.ராஜ்குமார், பெரம்பலூர் வட்டாட்சியர் சரவணன், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகாதேவி ஜெயபால் மற்றும் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இராயபுரம் தொகுதி 53வது வார்டில் மின்ட் மாடர்ன் சிட்டியில் மக்கள் தொகைக்கு ஏற்ப குடிநீர் குழாய்களை புதுப்பிக்கும் பணிகளை இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா. மூர்த்தி ஆய்வு மேற்கொண்டார். விரைவில் அந்த பணிகளை முடிக்கும் படி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். நிர்வாகிகள் மற்றும் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் அதிகாரிகள் உடன் இருந்தனர்.

41.அ.வட்டத்தில் வட்ட கிளைகழக மற்றும் பாக பொறுப்பாளர்கள் மற்றும் பாக இளைஞரணி பயிற்சி பாசறை பற்றிய ஆலோசனை கூட்டம் அவைத்தலைவர் எஸ். இளங்கோவன் தலைமையில் வட்ட கழகச் செயலாளர் வழக்கறிஞர் எஸ். லட்சுமி காந்தன் அவர்கள் முன்னிலையில் தியாகராய நகர் கிழக்கு பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் ப. பாலாஜி அவர்கள் , 141 . அ. வட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எஸ். யுவராஜ் அவர்கள் வரவேற்க சமூக வளை தள பாசறை விளக்க கூட்டம் சென்னை தென்மேற்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கோடம்பாக்கம் அஸ்வின் குமார் அவர்கள் மற்றும் பகுதி இளைஞரணி அமைப்பாளர் கா. மணிகண்டன் அவர்களுடன் ஆலோசனை நடைபெற்றது. மேலும் இந்நிகழ்ச்சியில் 1) பாக கமிட்டி உறுப்பினர்கள் செயல்பாடுகள். 2) புதிய வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் பணி . 3) மார்ச் 1 தமிழக முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா கொண்டாட்டம் பற்றிய விரிவான ஆலோசனைகள் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் வட்ட நிர்வாகிகள் , பாக பொறுப்பாளர்கள் மற்றும் வட்ட பாக இளைஞரணி சகோதரர்கள் கலந்து கொண்டனர் .

கல்வியை எப்படியாவது கொடுத்துவிட்டால் போதும் என

மாணவச் செல்வங்களுக்காக திட்டங்களை செயல்படுத்துகிறார் முதல்வர்!

அறந்தாங்கி – வெண்ணாவல்குடியில் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பேச்சு!

புதுக்கோட்டை, பிப். 14- புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி சட்டமன்ற தொகுதி திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம் வெண்ணாவல்குடி அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு 10 மற்றும் 12ஆம் வகுப்பில் பயிலும் மெல்லக் கற்கும் மாணாக்கர்களும் தேர்வில் எளிதில் வெற்றி பெற வேண்டும் என்ற நோக்கில் எமது நிதிப் பங்களிப்புடன் மிகவும் எளிமையாக புரிந்து கொண்டு பயிலும் வகையில் வடிவமைக்கப்பட்ட சிறப்பு கையேட்டினை பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் மாணவ மாணவிகளுக்கு வழங்கி உரையாற்றினார்.

அப்போது அமைச்சர் சிவ வீ.மெய்யநாதன் பேசியதாவது:

கல்வியை கொடுப்பதற்காக ஆசிரிய பெருமக்கள் 365 நாட்களும் தங்களது பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுப்பது போல் பயிற்றுவிக்கின்றார்கள். அதற்காக ஆசிரிய பெருமக்களுக்கு எனது நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன். மாணவச் செல்வங்களுக்கு கல்வியை கொடுத்து விட்டால் எதிர்காலத்தில் எதைப் பற்றியும் கவலைப்பட வேண்டியதில்லை. விழா அரங்கம் மாணவர் விடுதி வேண்டும் என கோரிக்கை வைத்தார்கள். அவை நிறைவேற்றப்படும். மின்சார வசதி ஆழ்குழாய் கிணறு வசதி ஏற்படுத்தப்படும். முன்பெல்லாம் பள்ளிகளில் காய்கறி தோட்டமிருக்கும். மூலிகை தோட்ட மிருக்கும். நவீன உலகத்தில் அதை பார்க்க முடியவில்லை. அந்தத் தோட்டங்கள் இந்த பள்ளிக்கு உருவாக்கி தரப்படும்.

பிளஸ் 2 பயிலும் மாணவ மாணவியர்கள் சிறந்த முறையில் தேர்ச்சி பெற்று உயர் கல்வி கற்பதற்காக சிறகடித்து பறக்க இருக்கின்றீர்கள். நீங்கள் உயர்கல்வி பயலுவதற்காக செல்கின்ற வேளையில் கல்வியில் மட்டுமே கவனம் செலுத்தி உயர வேண்டும். பாவேந்தர் பாரதிதாசன், பாரதியாரின் கூற்றுப்படி கல்வியில் சிறந்த மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. போட்டித் தேர்வு மூலமாக நீங்கள் நல்ல வேலைக்கு செல்ல முடியும்.

பெண்கள் உயர் கல்வி பயில புதுமைப்பெண் திட்டம் மூலமாக மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது. மாணவர்களுக்கும் மாதம் ரூ.1000 வழங்கப்படுகிறது. நான் முதல்வன் திட்டம் நீங்கள் பதிவு செய்து கொள்ள வேண்டும். இத்திட்டத்தின்படி போட்டி தேர்வுக்கு செல்லும் போது மாதம் 7500 ரூபாய் வழங்கி உயர் பதவிகளுக்கு செல்ல உதவி செய்கின்ற முதல்வர் தான் நமது முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள். கிராமப்புற பள்ளியில் இருந்து ஐ.ஏ.எஸ். ஐ.பி.எஸ். போன்ற ஆட்சி பணிக்கு செல்லும் மாணவர்களுக்கு கல்விச் செலவை அரசே ஏற்கின்ற அளவில் இத்திட்டத்தை நமது முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வருகிறார்கள் என்பதை நீங்கள் மறந்து விடக்கூடாது.

மாணவச் செல்வங்களுக்கு கல்வியை கொடுத்து விட்டால் போதும் அவர்களது முன்னேற்றத்தை பற்றி கவலைப்பட தேவையில்லை என்ற அடிப்படையில்தான் முதலமைச்சர் அவர்கள் திட்டங்களை செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் . கல்வியை கற்கும் போது சிலருக்கு கசப்பாக இருக்கலாம். ஆனால் அளவற்ற திறமைகள் ஒவ்வொரு இடத்திலும் இருக்கிறது . அதை எது என்று கண்டறிந்து நீங்கள் வெளிப்படுத்தும்போது வெற்றியாளராக வருவீர்கள். அதற்கான சிறு உதவி தான் சிறப்பு கையேடுகள். உங்களுக்கு சிறப்பு கையேடு வழங்கப்பட்டிருக்கிறது. இதை பயன்படுத்திக் கொள்ள வேண்டும். தேர்வுக்கு உதவும் வகையில் பள்ளிகளுக்கு நேரடியாக சென்று சிறப்பு கையேட்டினை வழங்கி வருகிறோம்.

அரசு பள்ளியில் படிக்கிறோம் எதிர்காலம் எப்படி இருக்கும் என்றெல்லாம் கவலைப்படாதீர்கள். இந்தியாவிற்கு பெருமை சேர்க்கும் வகையில் விண்கலத்தை செலுத்தியவர் அரசு பள்ளியில் படித்தவர் தான். ஒவ்வொருவரும் சாதனையாளராக மாற வேண்டும் என்பது எனது வேண்டுகோள் மாணவச் செல்வங்கள் எதிர்காலத்தில் எல்லா துறையிலும் சிறந்து விளங்க வேண்டும் என கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன்.

நிகழ்வில் முதன்மைக் கல்வி அலுவலர் கூ.சண்முகம், ஒன்றிய செயலாளர்கள் கே.பி.கே.டி. தங்கமணி, அரு.வடிவேல் மற்றும் தலைமை ஆசிரியர், ஆசிரிய, ஆசிரியைகள், கல்வித்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

முத்துப்பேட்டை ஒன்றிய அவைத்தலைவர்

மறைந்த நா.முத்துராமலிங்கம் நினைவேந்தல்!

பள்ளிக் குழந்தைகளுக்கு கல்வி உபகரணங்கள்!

திருவாரூர், பிப்.14- திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டை ஒன்றிய அவைத்தலைவர் மறைந்த நா.முத்துராமலிங்கம் அவர்களின் முதலாமாண்டு நினைவு நாளை முன்னிட்டு முத்துப்பேட்டை ஒன்றியக் கழகம் சார்பில் வேப்பஞ்சேரியில் அரசு விதிகளின்படி அமைக்கப்பட்ட கொடிமேடையில் கழகக் கொடியேற்றப்பட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

முத்துப்பேட்டை ஒன்றிய செயலாளர் இரா. மனோகரன் தலைமையில் நடைபெற்ற நினைவேந்தல் நிகழ்வுகளில் மறைந்த நா.முத்துராமலிங்கம் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. அதனை தொடர்ந்து அரசு தொடக்கப்பப்பள்ளி மாணவ - மாணவியருக்கு கல்வி உபகரணங்கள் வழங்கப்பட்டது.

ஒன்றியச் செயலாளர் இரா.மனோகரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வுகளில் மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் அன்பழகன், ஒன்றிய துணைச் செயலாளர் முத்துலெட்சுமி சிவா, முன்னாள் ஊராட்சி தலைவர் ராச. ரவிச்சந்திரன், பாண்டி சங்கர், ரா.முத்துக்குமார், முத்துகிருஷ்ண ராஜா, முன்னாள் ஊராட்சி துணைத் தலைவர் முருகேஷ், சந்துரு, ராஜா, கருணாநிதி உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்வுகளை வேப்பஞ்சேரி கிளைச்செயலாளர் முத்து. தமிழழகன் மற்றும் மறைந்த நா. முத்துராம லிங்கம் அவர்களின் குடும்பத்தினர் ஒருங்கிணைத்து நடத்தினர்.

சென்னை கிழக்கு மாவட்டம் திரு.வி.க.நகர் தெற்கு பகுதி 75வது வட்ட தி.மு.க சார்பில் B.L.A 2 பாகமுவர்கள் மற்றும் B.L.C கழக நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் 'வெல்வோம் 200 படைப்போம் வரலாறு' என்ற இலக்கில் இந்து சமய அறநிலைதுறை மற்றும் சென்னை பெறுநகர வளர்ச்சி குழுமத்தின் அமைச்சர் மாவட்ட கழக செயலாளர் பி.கே.சேகர்பாபு அறிவுறுத்தலின்பேரில் 75வது வட்ட கழக செயலாளர் வி.கா.வெங்கடேசன் தலைமையில் நடைபெற்றது கூட்டத்தில் திரு.வி.க. நகர் சட்டமன்ற உறுப்பினர் ப.தாயகம்கவி மற்றும் தேர்தல் பொறுப்பாளர் தண்டலடம் என்.கிருஷ்ணமூர்த்தி, திரு.வி.க.நகர் பகுதி கழக செயலாளர் எம்.சாமிகண்ணு மற்றும் கழக நிர்வாகிகள் மற்றும் B.L.A 2 பாகமுவர்கள் மற்றும் B.L.C கழக நிர்வாகிகள் மற்றும் இளைஞர் அணி பாக பொருப்பாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். வெல்டிங் ச.பாபு மற்றும் ந.தமிழ்மணி நன்றியுரை தெரிவித்தனர்.